செ.வெ.எண்.104/2018 நாள்: 10.03.2018

**காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பயிற்சி மையத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான வாழ்க்கை தொழில் வழிகாட்டி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பயிற்சி மையத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் வேலைவாய்ப்புத் துறை மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான வாழ்க்கை தொழில் வழிகாட்டி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பேசியதாவது,

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்காக இப்பயிற்சி நடத்தப்படுகிறது. சொந்த இடத்தில் தங்கி பயிலும் வசதியின்றி, படிக்கும் சூழலின்றி இருக்கும் மாணவ-மாணவிகள் அரசு நடத்தும் இவ்விடுதியில் தங்கி படித்து வருகின்றனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுகாக 13 விடுதிகளும், பள்ளி மாணவிகளுக்காக 7 விடுதிகளும், கல்லூரி மாணவர்களுகாக 5 விடுதிகளும், கல்லூரி மாணவிகளுக்காக 3 விடுதிகளும் ஆகமொத்தம் 28 விடுதிகள் நடத்தப்படுகிறது. இவ்விடுதிகளில் கல்லூரி மாணவர்கள் 597 பேரும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் 358 மாணவவர்களும் ஆகமொத்தம் 955 மாணவர்கள் தங்கி பயின்று வருகின்றனர். அம்மாணவர்களில் 10ஆம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம், 12ஆம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம், மருத்துவம், மருத்துவம் சார்ந்த படிப்புகள், நுழைவுத் தேர்வுகள் குறித்தும், தேர்வணைய தேர்வுகளை எப்படி கையாண்டு வெற்றி பெறலாம், கல்லூரி படிப்பிற்கு பிறகும் எந்தெந்த வேலைக்கு எந்தெந்த படிப்பை படிக்கலாம், படித்த கல்விக்கு எந்தெந்த வேலைகள் செய்யலாம் போன்ற தொழில் வழிகாட்டி பயிற்சி வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.முருளி, வேலைவாய்ப்புத்துறை துணை இயக்குநர் திரு.அருணகிரி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.